# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி,
# தருமபுரி

நக எண் 1569/2008/பி2 நாள் 24.03.2017.

## சுற்றறிக்கை

பொருள் : உபயோகித்தல் - கோப்புகள், ஆவணங்கள், கடன் மனுக்கள், பட்டுவாடா மனுக்கள் மற்றும் கணக்கு துவங்குதல் - பரிந்துரைக்க, சிகப்பு மை கொண்ட பேனாவை தவிர்க்க அறிவுறுத்தல் - பற்றி.

பார்வை : கடன் மனுக்கள் மற்றும் கோப்புகளை பராமரித்தல்.

*****************

நமது வங்கி, வாடிக்கையாளர்களுக்கு சேமிப்புக் கணக்கு, நடப்புக் கணக்கு, தொடர் இட்டுவைப்பு கணக்கு, நிரந்தர இட்டு வைப்பு கணக்கு மற்றும் பல்வேறு வகையான கடன் கணக்குகள் துவங்கி வங்கிச் சேவையை செய்து வருவதோடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், பணியாளர் சிக்கனச் சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள் மற்றும் சர்க்கரை ஆலைகள் ஆகியவைகளுக்கு நிதி உதவி வங்கியாகவும் விளங்குகிறது.

மேற்குறிப்பிட்ட வங்கிச் சேவையை செய்வதற்காக பராமரிக்கப்பட்டு வரும் செல்லேடுகளிலும் கடன் ஆவணங்களிலும் கடன் மனுக்களிலும் கோப்புகளிலும் வங்கி அலுவலர்கள் "சிகப்பு மை " கொண்ட பேனாவை உபயோகித்து வருகின்றனர்.

இனிவருங்காலங்களில் " சிகப்பு மை கொண்ட பேனா " (Red ink Pen) உபயோகிப்பதை தவிர்த்து நீல மை (Blue ink) அல்லது கருப்பு மை (Black ink) கொண்ட பேனாவை உபயோகிக்க அனைத்து வங்கிப் பணியாளர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், இச்சுற்றறிக்கையை, பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை அளிக்க அனைத்து பணியாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- கி.ரேணுகா
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்.

பெறுதல்,
அனைத்து வங்கிப் பணியாளர்கள்.

/உண்மை நகலல் / மேலாளர் (நிறுவனம்)

24.3.17